வெளியீடு 25-7-2002 Issued 25-7-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஆகஸ்ட் 30, 2001 – தொகுதி 8– எண் 2**

**Thursday the 30th August, 2001 – Volume 8– No. 2**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

512/2008

## 30-08-2001

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. அறிவிப்பு

பேரவை அலுவல் மாற்றம் — 299

2. இரங்கல் தீர்மானம்

திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் மறைவு — 300 - 324

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 300

திரு. ஆ[illegible]ன் — 300 - 301

* திரு. லா. சந்தானம் — 302 - 303

திரு. ம. அப்துல் லத்தீப் — 303

திரு. கே.என். இலட்சுமணன் — 304

திரு. ஜி. பழனிசாமி — 304 - 305

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 305 - 306

* திருமதி டி. யசோதா — 306 - 308

திரு. ஜி.கே. மணி — 309 - 312

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 312 - 320

*பேராசிரியர் க. அன்பழகன் — 320 - 322

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 322 - 323

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 324 - 325

223443
சென்னை-600 009

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 14, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 30, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்

பொன்றாது நிற்பதொன்று இல்"

உயர்ந்த புகழ் அல்லாமல் உலகத்தில் ஒப்பற்ற ஒரு பொருளாக அழியாமல் நிலைநிற்கவல்லது வேறொன்றும் இல்லை.

## 1. அறிவிப்பு

### பேரவை அலுவல் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை 9-30 மணியளவில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 15 - காவல் துறை மற்றும் 16 - தீயணைப்புத் துறை ஆகியவை நாளை 31-8-2001 காலை 10-00 மணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, விவாதமும் அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பதிலுரையும் இருக்கும். பின்னர் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும். நாளை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

# 2. இரங்கல் தீர்மானம்

## திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் மாநில காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான பெருந்தகை திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் இன்று அதிகாலையில் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், இந்திய அரசியல் அரங்கில் பெரும் பங்கு வகித்தவரும், சிறந்த தேசியவாதியும், 1989 முதல் 1991 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 19-1-1991 முதல் 30-1-1991 வரை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும், 1977, 1983, 1995 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் மாநிலங்களவைக்கு நான்கு முறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் செயலாற்றியவரும், இசை ஆர்வம், இலக்கிய ஆர்வம், தமிழ் மொழியில் ஆர்வம் மிக்கவரும், இனிய பண்பும் எளிமையும், அடக்கமும் கொண்டு அனைவரிடத்தும் நட்புணர்வோடு திகழ்ந்தவரும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் நிறுவனத் தலைவருமான திரு. ஜி.கே. மூப்பனார் ஐயா அவர்கள் இன்று அதிகாலை திடீரென்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும் ஆறொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்த இயக்கத்திற்கும் இப்பேரவை தன் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிகப் பெரிய அரசியல் மேதையை இந்த நாடு இன்றைக்கு இழந்துவிட்டது. 1965-லிருந்து 10 ஆண்டு காலம் தஞ்சை மாவட்டத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராகவும், 1976-லே தமிழகக் காங்கிரஸினுடைய தலைவராகவும், 1980-லிருந்து 8 ஆண்டு காலம் அகில இந்திய காங்கிரஸ்



கட்சியினுடைய பொதுச் செயலாளராகவும் இருந்து பணியாற்றி, இந்த நாட்டு மக்களால் 'மக்கள் தலைவர்' என்று போற்றப்பட்ட ஐயா மூப்பனார் அவர்களுடைய மறைவு இந்த நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

டெல்லியிலே அவர் இருக்கின்ற காலத்திலே Western Court என்ற அவருடைய இல்லத்திலே பல மாநிலங்களினுடைய முதலமைச்சர்கள், பல மாநிலங்களினுடைய கவர்னர்கள் எல்லாம் அவரைப் பார்ப்பதற்காக காத்துக்கொண்டிருந்ததை நாம் பார்த்திருக்கிறோம். அந்த அளவிற்கு டெல்லி அரசியலிலே கொடிகட்டிப் பறந்தவர் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள். அதேபோன்று முன்னாள் பிரதமர்கள் — மரியாதைக்குரிய திருமதி இந்திரா காந்தி அவர்கள், ராஜீவ்காந்தி அவர்கள், நரசிம்மராவ் அவர்கள், போன்றவர்களோடு இணக்கமாகப் பணியாற்றி, தமிழகத்திலே காங்கிரஸ் கட்சியைத் தூக்கி நிறுத்திய முக்கியமான தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள்.

முற்பகல் 10-05

பல சந்தர்ப்பங்களிலே நான் அவரை அவருடைய இல்லத்திலே சந்திக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. அப்படிப்பட்ட நேரத்திலே அவருடைய பண்பையெல்லாம் நான் பார்த்து உண்மையிலேயே வியந்திருக்கிறேன். சென்று பார்க்கக்கூடியவர் யார் என்று பாரக்காமல், அவர்கள் வயதிலே முதியவராக இருந்தாலும் சரி, இளையவராக இருந்தாலும் சரி அல்லது எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அவர் பண்போடு எழுந்து நின்று வணக்கம் செலுத்தி, அவர்களை வரவேற்பதிலும் சரி, பேசிவிட்டுச் செல்லும்போது வாசல் வரை சென்று வழியனுப்புவதிலும் சரி, ஒரு மிகப் பெரிய பண்பாளராக இந்த நாடே போற்றும் தலைவராகத் திகழ்ந்த ஐயா மூப்பனார் அவர்களுடைய மறைவு, இந்த நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரை இழந்து வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய இயக்கமான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸினுடைய தலைவர், மக்கள் தலைவர் என்று அனைவராலும் போற்றப்பட்ட மரியாதைக்குரிய தலைவர் மூப்பனார் அவர்கள் இறந்த செய்தி,

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்."

என்பது போல, இன்றைய நாள் வாளாக நமக்கு அமைந்திருக்கிறது. அந்த மாபெரும் தலைவரை காலன் எடுத்துக்கொண்ட நாளான இந்த நாளிலே நாம் மிகுந்த ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் இன்றைக்கு நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். ஏனென்றால், அவர் இந்தியத் திருநாட்டினுடைய ஒரு பெரிய தலைவராக பல்வேறு காலகட்டங்களிலே இருந்து, இந்தியத் திருநாட்டினுடைய நிலைகளையெல்லாம் தீர்மானிக்கக்கூடிய இடத்திலே, அன்றைக்கு இருந்த பிரதம அமைச்சரோடு உரிய நட்போடு இருந்து பழகியவர்.

அதுபோல தமிழகத்திலே மதச்சார்பற்ற அணி வெற்றி பெறவேண்டுமென்பதற்காக தன்னுடைய உடல்நலத்தைக் கூட கருதாது, மிகுந்த சிரமத்தை எடுத்துக்கொண்டு பாடுபட்டார். அந்த நேரத்தில் அவர் மதுரைக்கு வந்தபோது, அவருக்கு உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும்கூட, அவருடைய உடலிலே வீக்கம் ஏற்பட்டிருந்த நிலையிலும்கூட, அங்கே தனது வேட்பாளர் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக வந்திருந்த நேரத்தில் நான்கூட அவரைச் சந்தித்து, 'ஐயா, உங்களுடைய உடல்நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள், நீங்கள் இந்த நாட்டுக்குத் தேவையான அரசியல்வாதிகளில் மிகவும் உயர்ந்த இடத்திலே இருக்கிறவர், ஆகவே நீங்கள் உங்களுடைய உடல்நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொன்ன நேரத்தில்கூட இந்த அணி வெற்றி பெறவேண்டுமென்று அங்கு வந்து அவருடைய பணியைச் செய்துவிட்டுத் திரும்பியவர்.

அதேபோல, அவர் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக இருந்தநேரத்திலும் சரி, தமிழகத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவராக இந்த அவையிலே இருந்தபோதும் சரி, பரபரப்பற்ற ஒரு அரசியல்வாதியாக, எல்லோருடைய இதயத்தையும் கவர்கின்ற நிலையில் நாணயம் மிக்க, தெளிந்த சிந்தனையுடைய, ஜனநாயக மரபு கொண்ட அரசியல்வாதியாக, தான் மட்டும் ஒரு முடிவை எடுக்கின்ற நிலையிலே இல்லாது தன்னுடைய கட்சித் தொண்டர்களின் முடிவே தன்னுடைய முடிவாக ஏற்று செயல்படுத்திவந்த ஒரு நல்ல தலைவர் இன்றைக்கு நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த நல்ல தலைவரின் மறைவுக்கு எங்களுடைய அகில இந்திய பார்வாடு பிளாக் இயக்கத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்து அவர் ஏற்று நடத்திய அந்தக் கட்சியைச் சார்ந்த தொண்டர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த தேசியவாதியும், அரசியல் பண்பாட்டுக்குச் சரியான இலக்கணம் வகுத்தவரும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய நிறுவனத் தலைவரும், இந்த அவையின் உறுப்பினராக இருந்து, நாடாளுமன்றத்திலேயும் நீண்டகாலம் பணியாற்றி, இனிய பண்பும், சிறந்த பண்பாடுகளையும் கொண்டு விளங்கியவருமான மரியாதைக்குரிய மக்கள் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்களுடைய மறைவு உண்மையிலேயே இந்த மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், இந்திய நாட்டுக்கே ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும். அண்மையில், அவர்கள் உடல்நலமின்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதுகூட, அவர் உடல்நலம் பெற்று மீண்டும் அரசியலிலே தீவிரமாக ஈடுபட்டு, தமிழ்நாட்டுக்கும், நாட்டுக்கும் உரிய சேவையைச் செய்வார் என்று எதிர்பார்த்தவேளையில் ஒரு வார காலமாக அவருடைய நிலைமை மோசமடைந்து வருகிறது என்ற தகவல்கள், தமிழ்நாட்டு மக்களுக்குப் பெரும் துயராக இருந்து, இன்றைக்கு அந்தத் தகவல்களுடைய இறுதி முடிவு வந்திருக்கிறது.

முற்பகல் 10—10

திடீரென்று இன்றைக்கு அவர் நம்மிடத்தில் இல்லை என்று கேள்விப்படும்போது ஆற்றொணாத் துயரம் நம் அனைவருக்கும் ஏற்படுகிறது. அவரை இழந்து தவிக்கின்ற அவருடைய குடும்பத்தினருக்கு, குறிப்பாக அவருடைய செல்வன் கோவிந்தவாசன், அவருடைய சகோதரிகள், அவருடைய குடும்பத்தினருக்கு, அவர் நிறுவிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அனைத்து நண்பர்களுக்கும், குறிப்பாக, காங்கிரஸ் இயக்கத்திற்கும், பொதுவாக தமிழ்நாட்டிற்கும், நம்முடைய நாட்டில் உள்ள தேசியவாதிகளுக்கும் என்னுடைய சார்பாகவும், இந்திய தேசிய லீகின் சார்பாகவும் நான் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை, அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா மூப்பனார் அவர்கள் ஒரு சிறந்த தேசியவாதி. நாட்டினுடைய விடுதலைக்காகப் போராடிய மிகப் பெரிய ஒரு தியாகி. அவருடைய வாழ்க்கையிலே சாதாரண மக்களுக்காக, அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறுவதற்காக அவர் எத்தனையோ தியாகங்களைச் செய்திருக்கின்றார். நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் மக்களுடைய நலனுக்காக வாதிட்டிருக்கின்றார். வெளியே பல போராட்டங்களை நடத்தியிருக்கின்றார். சிறந்த தேசியவாதி மட்டுமல்ல, சிறந்த கலை அன்பர், ரசிகர். அதுமட்டுமல்ல, இயக்கத்தை உருவாக்கி நடத்திச் செல்கின்ற மிகப் பெரிய திறமை வாய்ந்தவர். அன்னாரது மறைவு நம்முடைய தேசத்திற்கும், தமிழகத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். அவருடைய மறைவால் வாடுகின்ற, துன்பப்படுகின்ற அவருடைய குடும்பத்தார்களுக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் எங்களுடைய பாரதிய ஜனதா கட்சி சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்து, ஐயா மூப்பனார் அவர்களுடைய ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுடைய மறைவிற்கு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் மனிதநேயம் உள்ள மக்கள் தலைவர். அரசியலிலே நிதானமும், நேர்மையும் கொண்டிருக்கிற காங்கிரஸ் இயக்கத்தினுடைய முன்னோடி. காமராஜருடைய வழி வந்தவர். தமிழ்நாட்டு அரசியலிலும், இந்திய அரசியலிலும் குற்றம் குறை சொல்ல முடியாத அளவுக்குச் சிறந்த முறையிலே மக்களுடைய நலனுக்குத் தன்னுடைய அரசியல் பணி முழுமையும் செயலாற்றியவர். ஒரு கட்சியினுடைய அடிமட்டத் தொண்டனாக இருந்து, அரசியல் உழைப்பால், அரசியல் நேர்மையால் உயர்ந்த பதவிகளுக்கு வந்து, அவர் ஆற்றியிருக்கிற பணிகளில் பல்வேறு பணிகள் சிறந்த பணிகளாக அமைந்திருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய பாரத



தேசத்திற்கு எப்படிப்பட்டவர்கள் எல்லாம் வர வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர் நல்ல சிந்தனையாளராக அரசியலிலே மிக நிதானத்தோடு செயலாற்றியது உண்டு. பல மணி நேரங்கள் சில அரசியல் தலைவர்கள் அவரைப் பார்த்து அவரிடத்தில் குற்றம், குறை சொல்கிறபோதுகூட, சில மணித்துளிகளிலே அவர் பதில் சொல்லுகின்ற அந்த அரசியல் பாங்கு—இதுவரையிலும் எந்த ஒரு தலைவரிடத்திலும் காணமுடியாத அளவுக்கு—அவருடைய பேச்சுத் திறமை அமைந்திருந்தது. அதோடுமட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு அவர் ஆற்றியிருக்கின்ற அந்த அரசியல் பணி இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் எந்த ஒரு வகையிலும் இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் தீங்கு விளைவித்துவிடக் கூடாது என்பதிலே அவர் சிந்தித்திருக்கிற சிந்தனை என்பது ஒரு ஆழ்ந்த சிந்தனையாகும். அப்படிப்பட்ட தலைவர் அவர். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய நிறுவனராக இருந்தாலும், தேசிய இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டிருந்தபோதிலும்கூட, தமிழ்நாட்டு அரசியலுக்கு, நமக்கு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. அவருடைய இழப்பு என்பது நம் அனைவருக்கும் மிகப் பெரிய இழப்பு. அவரோடு சேர்ந்து பழகுகின்ற வாய்ப்பிலும், அதேபோன்று இந்த பாமன்றத்திலே சேர்ந்து பணியாற்றுகின்ற அந்தத் தன்மைகளில்கூட, எவ்வளவு நிதானத்தோடு அவர் உரையாற்றுவார் என்பது எங்களுக்கெல்லாம் மிகப் பெரிய ஒரு படிப்பினையாக அமைந்தது. அப்படிப்பட்ட தலைவர் இன்றைக்கு மறைந்திருக்கிறார். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கும், அதனுடைய தொண்டர்களுக்கும் ஆறுதலையும், அவருடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும் இந்த அவையின் மூலமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மதச்சார்பற்ற ஜனநாயக அணியை உருவாக்குவதிலே, அதைப் பாதுகாத்து வளர்ப்பதிலே ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்திருந்த மூப்பனார் அவர்கள், இன்று நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார் என்பது தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற ஒரு மிகப் பெரிய இழப்பு என்று நான் கருதுகிறேன். அவருடைய வாழ்க்கை ஒரு மிக உன்னதமான வாழ்க்கை என்பதை இந்த நாடு நன்கு அறியும். அகில இந்திய மட்டத்திலே இந்திய தேசிய காங்கிரசினுடைய ஒரு பெரிய

தலைவராக இருந்தவர். பல மாநிலங்களிலே பிரச்சினைகள் ஏற்படுகிற நேரத்தில் அகில இந்தியத் தலைமையின் பிரதிநிதியாக அந்த மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு, அந்த மாநிலங்களிலே ஏற்படுகிற பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்துவதில் ஒரு சிறந்த பாத்திரத்தை வகித்துக்கொண்டிருக்கிறவர் என்ற நிலைகூட மூப்பனார் அவர்களுக்கு இருந்தது. ஆனால், தான் எடுத்துக்கொண்டிருக்கிற கொள்கைதான் தனக்கு முக்கியம் என்ற காரணத்தினால் அவர் இந்திய தேசிய காங்கிரசினுடைய ஒரு உன்னதமான நிலையிலே இருந்ததற்கு பிறகும்கூட, அந்த இயக்கத்தைவிட்டு வெளியே வந்து தமிழ் மாநில காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தை உருவாக்கவேண்டிய நிலைகூட ஏற்பட்டது என்பதை நாடு அறியும்.

*முற்பகல் 10-20*

அடுத்து, பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி உண்மையாக இருக்குமேயானால், அவருடைய மகனை ராஜ்ய சபா உறுப்பினராக்க ஆக்கவேண்டுமென்று அந்தக் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்கள் அவரை நிர்பந்தப்படுத்தியதற்குப் பிறகும்கூட, அவர் கொள்கையினுடைய அடிப்படையில், தன்னுடைய மகன் அந்த இடத்திற்கு வர உரிமை இல்லை, அவன் தன்னுடைய வேலை காரணமாகவே அந்த இடத்தைப் பெற்று வரவேண்டியவன் என்ற அந்தக் கருத்தை அவர் உறுதியாகக் கடைப்பிடித்து, அவரை ராஜ்ய சபா உறுப்பினராக்க வேண்டும் என்ற நிர்பந்தத்திற்குக்கூட பணியாமல் இருந்தவர். இந்திய தேசிய அரசியலில் அப்படி கொள்கைப் பிடிப்பு கொண்டு வளர்ந்திருந்த ஒரு தலைவர், இன்று இந்த நாடு மதச்சார்பற்ற ஒரு கருத்தை, அந்தக் கொள்கையை வளர்க்க வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்று எண்ணி செயலாற்றிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மூப்பனார் அவர்களுடைய இழப்பு என்பது ஈடேற்ற முடியாத ஒரு இழப்பு என்று நான் கருதுகிறேன். அவருடைய மறைவினால் இன்று தவித்துக் கொண்டிருக்கிற அவருடைய குடும்பத்தாருக்கும், அதேபோன்று தமிழ் மாநில காங்கிரஸிற்கும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக இரங்கலைத்



தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அருமைத் தலைவர் மூப்பனார் அவர்கள் நல்ல மகனாகவும், நல்ல சகோதரராகவும், நல்ல கணவராகவும், நல்ல தந்தையாகவும், நல்ல குடிமகனாகவும் வாழ்ந்து காட்டியவர். ஒரு மனிதநேயம் மிக்க தலைவரை தமிழகம் இழந்திருக்கிறது. சிறந்த பண்பாளர். நம்முடைய முதல்வர் அவர்கள்கூட, அவர் உடல்நலம் குன்றியிருக்கின்ற நேரத்தில் வீட்டிலே போய் பார்த்துவிட்டு, வெளியே வருகின்றபோது வீட்டு வாசல் வரையிலும் வந்து வழி அனுப்புகிற போது, உங்கள் உடல்நிலை சரியில்லை, நீங்கள் வரவேண்டாம் என்று சொல்லிய நேரத்திலேகூட, இதுதான் இந்த மாவட்டத்தின் பண்பாடு, தஞ்சையினுடைய பண்பாடு என்று சொல்லி, உடல்நிலையைக்கூட பொருட்படுத்தாமல் வாசல் வரையில் வந்து வழியனுப்பி வைத்த நல்லதொரு பண்பு மிக்க பண்பாளர்.

கர்நாடக இசையிலே மிகவும் பற்றுக் கொண்டவர். மதுரை சோமுவினுடைய இசை நிகழ்ச்சி எங்கே நடந்தாலும் அதைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்திலே இருக்கக்கூடியவர். அதேபோல பரதநாட்டியத்திலேகூட அதிகமான பற்றுக் கொண்டவர். தலைவர் மூப்பனார் அவர்களை அருமை அன்னை இந்திரா காந்தி அவர்கள் அகில இந்திய அரசியலுக்குக் கொண்டு வந்தபோது பொதுச் செயலாளராக நியமித்தார்கள். அன்றிலிருந்து அந்தக் குடும்பத்தினுடைய ஒரு விசுவாசியாக மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் மாறிவிட்டார்கள். அன்னை இந்திரா காந்திக்குப் பிறகு அருமைத் தலைவர் ராஜிவ் காந்தி காலத்திலும் அவர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாளராக இருந்தார். அதற்குப் பிறகு, அருமை அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலே ஒரு நல்ல குடும்ப நண்பராக அவர் விளங்கி வந்தார்.

இப்போது டில்லியில் இருக்கிற அக்பர் சாலையில் 24 எண்ணுள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய இடம், தலைவர் மூப்பனார் அவர்கள் ராஜ்ய சபா உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டதற்கு அவருக்கென்று தங்குவதற்கு ஒதுக்கப்பட்ட இடம். 1977 ஆம் ஆண்டு ஆட்சியிலேயிருந்து இறங்கியதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சிக்கு அலுவலகம் நடத்துவதற்கு இடமில்லை என்ற காரணத்தால் தனக்கு ஒதுக்கிய அந்த வீட்டை காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்தார். Western Court-லே ஒரு சிறிய அறையிலே தன்னுடைய டெல்லி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். இன்றைக்கும் அவர் தந்த அந்த வீடுதான் 24, அக்பர் சாலை, புது டெல்லி காங்கிரஸ் கட்சியினுடைய முகவரியாக, அலுவலகமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது.

[திருமதி டி. யசோதா] [2001 ஆகஸ்ட் 30

1996 ஆம் ஆண்டு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைத் தோற்றுவித்து தேர்தலிலே வெற்றி பெற்றதற்குப் பிறகு, 20 நாடாளுமன்ற உறுப்பினர்களை டெல்லிக்கு அழைத்துச் சென்று, அருமை அன்னை சோனியா காந்தியைச் சந்தித்து, இவர்கள் அத்தனைபேரும் உங்கள் பின்னாலே நிற்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்மா, நீங்கள் வேறுபாடு நினைக்க வேண்டாம் என்று சொல்லிய அந்தப் பரந்த மனதிற்குச் சொந்தக்காரர்.

முற்பகல் 10-25

அது மட்டுமல்ல, அருமைத் தலைவர் மூப்பனார் அவர்கள் 2001-ல் நடைபெற்ற தேர்தலில், சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸுக்கும் சேர்த்து அருமை அன்னை சோனியா காந்தியினுடைய ஒப்புதலோடு இந்தக் கூட்டணி அமைப்பதிலே, சீட்டுகள் பெறுவதிலே கையெழுத்து போட்டு காங்கிரஸுக்கும் சேர்த்துதான் அதில் கையெழுத்து போட்டு அந்த 15 இடங்களைப் பெற்றார்கள் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த அளவுக்கு அன்னை சோனியா காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவர்கள் திகழ்ந்தார்கள். அது மட்டுமல்ல, மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்னதாகக்கூட அவர் டெல்லிக்குச் சென்று அன்னை சோனியா காந்தியைச் சந்தித்துவிட்டு வந்தார்கள். அவர் இறுதியாகச் சொன்னது எனக்கு இப்பொழுதுகூட நினைவிருக்கிறது. எங்கிருந்து கொண்டு வந்தேனோ அங்கேயே கொண்டு போய் சேர்த்துவிட வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் அந்த நினைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக காலன் அவசரப்பட்டுவிட்டான். இன்று அவர் நம்மிடத்திலே இல்லை.

அதே நேரத்திலே, ஒரு மிகச் சிறந்த, காமராஜருடைய வாரிசாகத் திகழ்ந்த மக்கள் தலைவர் மூப்பனார், காமராஜரைப் போலவே எளிமையும், நேர்மையும், தூய்மையுமான ஒரு நல்ல அரசியல்வாதியாகத் திகழ்ந்த அவர், மற்றவர்களுடைய கஷ்டங்களை எல்லாம் சுமக்கின்ற ஒரு சுமைதாங்கிக் கல்லாக இருந்தாரே தவிர, தன்னுடைய வேதனைகளை அவர் யாரிடத்திலும் பகிர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட ஒரு நல்ல தலைவரை இழந்து தவிக்கின்ற அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும், குறிப்பாக, தம்பி கோவிந்தவாசன் அவர்களுக்கும், அவரை இழந்து தவிக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்த சகோதரர்களுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற அனைத்து சகோதரர்களுக்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.



2001 ஆகஸ்ட் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்திலே பாட்டாளி மக்கள் கட்சி தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு எங்களுடைய கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று இயற்கை எய்திவிட்ட பெருந்தலைவர் ஜி.கே மூப்பனார் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த செய்தி என்பது, இந்த மாமன்றத்தையும், தமிழ் மாநில காங்கிரஸ், தமிழ் மக்களை எல்லாம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்ட செய்தியாக நாம் கருதி மிகுந்த வேதனையில் இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம். ஒரு மனிதன் தோன்றினாலும்கூட தான் இறக்கின்ற வரையிலே இந்த நாட்டு நலன் கருதி மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற நிலையை உணர்த்தும் வகையிலே அவருடைய பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வள்ளுவர் பெருந்தகை

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்று சொன்னாரே, அதைப்போல, தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சைத் தரணியிலே மிகப் பெரிய நிலச்சுவான்தார் குடும்பத்திலே தோன்றினாலும்கூட பெருந்தலைவர் காமராஜ் அவர்களாலே முழுமையாக ஈர்க்கப்பட்டு காங்கிரஸ் கட்சியிலே இணைத்துக் கொண்ட காலத்திலேயிருந்து இன்றையவரையிலே அவருடைய பணிகளை, பண்புகளை, செயல்களை எல்லாம் பார்ப்போம் என்று சொன்னால் அவர்களை யாரும் மிகுதியாகப் பாராட்டாமல் இருக்க முடியாது. தன்னுடைய பொது வாழ்க்கையிலே சாதாரண செயல்வீரராக இணைத்துக் கொண்ட காலத்திலேயிருந்து, பிறகு மாவட்ட காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக, காங்கிரஸ் கட்சியினுடைய மாநிலத் தலைவராக, அகில இந்திய பொதுச் செயலாளராக தன்னை உயர்த்திக் கொண்ட நேரத்திலேகூட எவ்வளவு பணி உயர்வு வந்தாலும்கூட தன்னுடைய பணியிலே பணிவு இருக்கும் என்பதை சுட்டிக் காட்டியவர். அந்த அளவிலே அவர் நல்ல பண்புக்கு சொந்தக்காரர். எவருக்கும் தனிப்பட்ட முறையிலே அவரவர்களுக்கென்று பண்புகள் இருப்பதுண்டு, குணங்கள் இருப்பதுண்டு. அந்த வகையிலே அவருடைய பண்பு என்பது பாராட்டுக்குரிய ஒன்றாக இருக்கிறது.

ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரையிலே, இளைஞர்கள் முதல் முதியோர் வரையிலே எல்லோரிடத்திலும் அன்பாகப் பேசக்கூடியவர்.

(முற்பகல் 10-30)

தன்னுடைய அரிய பண்பினாலும், அன்பினாலும், ஆக்கத்தாலும் செயற்கரிய காரியங்களை எல்லாம் செய்து முடிக்கக் கூடியவர். அகில இந்திய பொதுச் செயலாளராக இருந்த காலத்திலே, இந்தியாவிலுடைய பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று காங்கிரஸ் கட்சியிலே இருந்த தீர்க்க முடியாத பிரச்சினைகளையெல்லாம், கடுஞ்சொல்லின்றி, அன்பாகப் பேசி அந்த மாநிலத்தினுடைய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைத்தார் என்று பத்திரிகைகளிலே நாம் படித்து இருக்கிறோம். நானும்கூட சின்ன வயதிலே அவரிடத்திலே நெருக்கமாகப் பழகியவன். அதற்குப் பிறகு, நான் பாட்டாளி மக்கள் கட்சிப் பொறுப்பிலே இருக்கிறேன் என்று சொல்லி அவரை சந்தித்த நேரத்திலே என்னை கட்டித் தழுவி, பாட்டாளி மக்கள் கட்சியிலே நீங்கள் பணியாற்றுவது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று சொல்லி, என்னை ஊக்குவித்த பெருமை அவருக்கு இருக்கிறது. தொடர்ந்து நான் பலமுறை அவரை சந்திக்கின்றபோதெல்லாம் அவர் என்னைக் கட்டித் தழுவிக்கொள்வார். ஆகவே, அந்த அளவிற்கு அவருடைய பாசம், பண்பு என்பது—மாற்றுக் கட்சியிலே இருந்தாலும்கூட அந்த அளவிற்கு நல்ல பண்பிற்கு சொந்தக்காரராக இருந்து ஊக்குவித்தார் என்பதை இங்கே நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, எங்களுடைய நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்கள், அவரைப் பல முறை சந்தித்த நேரத்திலேகூட இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு சென்ற பிறகு, என்னிடத்தில் அவராகவே தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசுவார். உங்கள் டாக்டர் வந்த நேரம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது, நீங்கள் இந்த சமூக நீதிக்காகப் பாடுபடுவதை நான் தூரத்திலேயிருந்து பார்க்கிறேன் என்று மிக உயர்வாக எங்கள் டாக்டர் ஐயா அவர்களைப்பற்றிச் சொல்வார். ஆகவே, அந்த அளவிற்கு மாற்று இயக்கத்தவரைக்கூட மதிக்கக்கூடிய நல்ல பண்பு இருந்தது என்பதை சுட்டிக்காட்டத்தான், இங்கே அதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, உடல்நலம் குறைவாக இருந்த நேரத்திலே எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களும், நாங்களும் சென்ற நேரத்திலே நாற்காலியிலே அமர்ந்திருந்தார். எங்களைப் பார்த்தவுடனே தட்டுத்தடுமாறி எழுந்து நின்றார். பிறகு நீண்ட நேரம் பேசிவிட்டு





வருகின்ற நேரத்திலேகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சகோதரி யசோதா அவர்கள் சொன்னதைப்போல, அந்த நாற்காலியிலே இருந்து மீண்டும் எழுந்து நின்று அனுப்பி வைக்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு எழுந்து நின்றார். நாங்கள் வேண்டாம் என்று சொன்னாலும்கூட, மீண்டும் ஒருவருடைய கையைப் பிடித்து எழுந்து நிற்கக்கூடிய அந்த அளவிற்கு இருந்தபோதும் மற்றவரை மதிக்க வேண்டுமென்ற அந்தப் பண்பு அவரிடம் இருந்தது. ஆகவேதான், அதை நான் மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டுகிறேன். அந்த அளவிற்கு நல்ல பண்புமிக்க ஒரு தலைவரை இந்த நாடு இன்று இழந்திருக்கிறது. ஆகவே, அந்த அளவிற்கு பண்புள்ள ஒரு மனிதனாக இந்த மண்ணிலே தோன்றி, தமிழகத்தினுடைய பெருமையை இந்திய அளவிலே நிலைநாட்டியவர். காங்கிரஸ் கட்சிக்குப் பெருமை சேர்த்தவர் அவர். இந்தச் சட்டமன்றப் பேரவையிலே பணியாற்றியவர். நீண்ட காலம் மாநிலங்களவை உறுப்பினராக இருந்து அங்கே மற்றவர்கள் எல்லாம் எந்த நிலையிலும் புண்படக்கூடிய வகையிலே இல்லாமல், இந்தியத் துணைக் கண்டத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே பணியாற்றிய அவருடைய அந்தப் பணி என்பது நாம் மறக்க முடியாதது.

அதைப்போலவே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலேகூட இந்தக் கூட்டணிக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று எங்களிடத்திலே பேசியவர். கூட்டணி என்பது இயல்பான ஒன்றாக இருந்தாலும்கூட, எந்த அணியிலே கூட்டு சேர்ந்தாலும்கூட அந்தக் கூட்டணி தர்மத்தைக் கட்டிக்காத்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று எல்லோரிடத்திலும் சொல்லக்கூடியவர். இன்று ஆட்சிக்கட்டிலில் இருக்கக்கூடிய நம்முடைய அரசுக்குப் பெரிதும் உறுதுணையாக, பக்கபலமாக இருந்தவர் என்பதையும் இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே, அந்த அளவிற்கு நல்ல பண்புமிக்க மனிதர். இன்னும் அவர் நீண்ட காலம் வாழ்ந்திருக்க வேண்டும். வயது ஒன்றும் கடந்துவிடவில்லை. அந்த அளவிலே, மருத்துவமனையிலேகூட எங்களுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள், அவரை சந்தித்துப் பேச முயற்சித்து, பேச முடியாத நிலையிலே உடல்நலம் விசாரித்துவிட்டு வந்தார். நேற்று 3-00 மணியளவிலேகூட நானும், எங்களுடைய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இராமச்சந்திரா மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். திரு. மூப்பனார் அவர்களுடன் பேச இயலாத நிலையிலே, அவருடைய மகன் மரியாதைக்குரிய சகோதரர் கோவிந்தவாசன் அவர்களிடத்திலே பேசி, அவருக்கு ஆறுதலை சொல்லிவிட்டு வந்தோம். அந்த அளவிற்கு நீண்ட

காலம் வாழ்ந்திருக்க வேண்டிய அந்த மாமனிதர், பெருந்தலைவர் இன்று நம்மிடையே இந்தத் தமிழகத்திலே இல்லை என்பது ஆழ்ந்து துயரப்படக்கூடிய சம்பவம் என்பதை மீண்டும் ஒருமுறை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்று சொன்னார் வள்ளுவர். செய்ய முடியாத காரியங்களையெல்லாம் இந்த நாட்டிற்காக செய்து முடித்த பெரியவரை, இந்த நாடு இழந்திருக்கிறது என்பது நமக்கெல்லாம் சொல்ல முடியாத துயரமான சம்பவம் என்பதை சுட்டிக்காட்டி, அந்த உத்தமரைப் பிரிந்து வாடிக்கொண்டிருக்கக்கூடிய அவருடைய அருமை மகன் கோவிந்தராசன் அவர்களுக்கும், அவருடைய சகோதரர்களுக்கும், குடும்பத்தாருக்கும், அவரைப் பிரிந்து வாடும் தமிழ் மாநில காங்கிரஸுக்கும், எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களின் சார்பிலேயும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும் நெஞ்சம் நெகிழ்ந்த ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும், ஆறுதலையும் சொல்லி, அமர்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து இருக்கிற எங்கள் அன்புத் தலைவரை இழந்து இருக்கிறோம். அவரைப் பற்றி எனக்கு முன்னாலே அவை முன்னவர் அவர்களும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் இங்கே பேசி இருக்கிறார்கள். அவருடைய பண்பைப் பற்றி, மேன்மையைப் பற்றி, சிறப்பைப் பற்றி எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவருடைய குடும்பத்தினுடைய பெருமையைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். செல்வச் செழிப்பிலே மிதந்த குடும்பத்திலேதான் அவர் பிறந்தார். இரண்டாவது– எல்லோருக்கும் தெரியும். அது ஒன்றும் இரகசியம் அல்ல— அந்தக் காலத்திலே பொதுவுடைமை மேடைகளாக இருந்தாலும், திராவிட இயக்க மேடைகளாக இருந்தாலும், பேசும்போது முதல் முதலில் வரிசையாக வருகின்ற பெயர்களில் அன்றையதினம் பெரிய நில உடைமையாளர்கள் பட்டியலில் அவர்கள் பெயர்தான் வரும். பூண்டி வாண்டையார், கபிஸ்தலம் மூப்பனார் என்றுதான் ஆரம்பிப்பார்கள். அப்படிப்பட்ட செல்வச் செழிப்பிலே மிதந்த குடும்பத்திலே கபிஸ்தலத்திலே அவர்



கோவிந்தசாமி மூப்பனார்—சரஸ்வதி அம்மாள் தம்பதியினருக்கு 1931 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் தேதி பிறந்தார். செல்வச் செழிப்பிலே வளர்ந்த குடும்பத்திலே பிறந்தாலும்கூட, அவர் மிகவும் எளியவராகத்தான் வாழ்ந்தார்.

அவருடைய வாழ்க்கையிலே என்றும் அந்தச் செல்வச் செழிப்பை நீங்கள் பார்க்கவே முடியாது. அவர் தொடக்கக் கல்வியையும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் ஊருக்குப் பக்கத்திலேயே பெற்றார். பாபநாசத்திலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளியிலேதான் அவர்கள் படித்தார்கள். பள்ளி இறுதி வகுப்புவரை அங்கே படித்தார்கள். அவருடைய அரசியல் பிரவேசம் என்பது, திருமதி யசோதா அவர்கள் குறிப்பிட்டதைப்போலவும், வேறு நண்பர்கள் குறிப்பிட்டதைப் போலவும், மிக இளம் வயதிலேயே அரசியலுக்கு வந்தவர். தொண்டராக, சீடராக அவர் வாழ்ந்திருக்கிறார். காமராஜருடைய உண்மையான தொண்டராக, காமராஜருடைய சீடராக வாழ்ந்தார். இளம் வயதிலேயே, 34 ஆம் வயதிலேயே அவர் தஞ்சை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். அன்றையதினம் தஞ்சை மாவட்டம் என்பது, தஞ்சை, நாகை, திருவாரூர், இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய ஒரு பகுதி என்று பெரிய மாவட்டமாக இருந்தது. அந்த மாவட்டத்திலே பல்வேறு ஜாம்பவான்கள் வாழ்ந்த காலம் அந்தக் காலம். இன்னும் சொல்லப்போனால், ஒருவரை ஒருவர் பிடிக்காத பெரிய மனிதர்கள் எல்லாம் வாழ்ந்த காலம். அனைத்துத் தரப்பினரும் அன்போடு ஏற்றுக்கொண்ட பெயர் தலைவர் மூப்பனார் பெயர் என்று சொன்னால், அது மிகையாகாது. அந்த அளவுக்கு இவர் தலைவர் என்று சொன்னால் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லி, அவரை அன்றையதினம் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். 10, 11 ஆண்டுகாலம் தஞ்சை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராக அவர் இருந்து இருக்கிறார். அதற்குப் பிறகு, தமிழகத்திலே தேசிய சக்திகளை ஓரணியிலே திரட்ட வேண்டும் என்பதிலே முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். காங்கிரஸ்காரர்களை எல்லாம் ஓரே அணியிலே கொண்டுவர வேண்டும் என்பதிலே அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார்; முன்னோடியாக முனைந்து நின்று செயல்பட்டார்.

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி கடற்கரையிலே நடைபெற்ற பிரம்மாண்டமான கூட்டத்திலே அன்னை இந்திரா காந்தியினுடைய ஒப்புதலோடு, ஆசியோடு, அன்றையதினம் அவரை

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக நியமித்தார்கள். ஒரு முறை மட்டுமல்ல, 3 முறை அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977-லே மீண்டும் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலிலேயும் அவர்தான் வெற்றி பெற்றார். அதற்கு பிறகு 1988 ஆம் ஆண்டு மீண்டும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராகத் தேர்வு பெற்றார். 11 ஆண்டுகாலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராகப் பணியாற்றி இருக்கிறார்கள். எட்டு ஆண்டுகாலம், 1980 ஆம் ஆண்டு தொடங்கி 1988 ஆம் ஆண்டு வரை டில்லியிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய பொதுச் செயலாளராக இருந்து இருக்கிறார்கள். அவ்வளவு நீண்டகாலம் வேறு யாரும் பொதுச் செயலாளராக இருந்ததே கிடையாது. அன்னை இந்திரா காந்தி காலத்திலேயும் சரி, அவருக்குப்பின் ராஜீவ் காந்தி காலத்திலேயும் சரி, 8 ஆண்டுகாலம் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார்கள். டில்லியிலே அரசியல் சதுரங்கத்திலே, 8 ஆண்டுகாலமாக ஒருவர் தொடர்ந்து பொதுச் செயலாளராகவும், அனைவருடைய அன்புக்கும், பாசத்திற்கும், பற்றுக்கும் உரியவராக வாழ்வது எளிய காரியமல்ல.

அவரைப் பொறுத்தவரையிலே, இங்கே ஆஸ்டின் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவர் எளிய அறையிலே — அவர் டில்லியிலே ஒன்றும் பெரிய வீட்டிலே வாழவில்லை — சாதாரணமான Western Court-லே தான் வாழ்ந்தார். அங்கு 2 அறைகளை அவர் எடுத்து இருப்பார். 19, 20 என்ற எண்ணுள்ள இரண்டு அறைகளை எடுத்து வைத்திருப்பார். அந்த அறைகளைப் பார்த்தீர்களேயானால், பல்வேறு மாநிலங்களுடைய முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் என்று பல்வேறு மாநிலங்களின் கட்சித் தலைவர்கள் பலருடைய படங்களையும் அங்கே பார்க்கலாம். அப்படித்தான் அவர் அங்கே முடிசூடா மன்னராக வாழ்ந்தார். பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களை உருவாக்கிய பெருமை தலைவர் மூப்பனார் அவர்களுக்கு உண்டு. அந்த அளவுக்கு 8 ஆண்டுகாலம் அவர்கள் அங்கே அகில இந்திய காங்கிரஸினுடைய பொதுச் செயலாளராக பணியாற்றினார்கள். 1977-ல் முதன் முறையாக மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மொத்தம் 4 முறை மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். 1977, 1983, 1995, 1998 என்று 4 முறை மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, கடைசிவரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்து இருக்கிறார்கள்.



முற்பகல் 10-40

இடையிலே இரண்டாண்டு காலம் பாபநாசம் தொகுதியினுடைய உறுப்பினராக இந்த அவையிலே இருந்தார்கள். சில காலம் எதிர்க்கட்சித் தலைவராகவும், தலைவர் அவர்கள் இங்கே இருந்தார்கள். தமிழ் ஆர்வம் உள்ளவர். இசை ஆர்வம் மிக்கவர். 30 ஆண்டு காலத்துக்கு மேலாக திருவையாறிலே தியாகப்பிரம்ம சபையினுடைய தலைவராக இருந்தார். தொடர்ந்து அவர் கடைசிவரை தியாகப்பிரம்ம சபையினுடைய தலைவராக இருந்திருக்கிறார்கள். அந்தச் சபைக்கு ஜனாதிபதியை அழைத்து வந்திருக்கிறார். துணை ஜனாதிபதியை அழைத்து வந்திருக்கிறார். பல்வேறு அமைச்சர்கள், பெரிய, பெரிய தலைவர்களை எல்லாம் அவர்கள் அழைத்து வந்திருக்கிறார்கள். அநேகமாக ஒவ்வோர் ஆண்டும் திருவையாறிலே நடைபெறுகின்ற இசை விழா என்று சொன்னால் அது மிகப் பிரசித்தமானது. அத்தனைபேரும் கேட்க வருவார்கள். நேரடியாகச் செல்ல முடியாதவர்கள் ரேடியோவிலே, டிவியிலே கேட்பார்கள். திருவையாறிலே நடக்கிற இசை விழாவுக்கு அவ்வளவு பெருமை உண்டு. அப்படி, பெருமைமிக்க தலைவராக அவர் வாழ்ந்தார். பல சிறப்புகளுக்கு உரியவர். மிகவும் எளிமையானவர். அவர் எங்களைப்போன்று கதர் ஆடை போடுகின்றவர் என்றாலும்கூட, அவர் போடுகின்ற கதர் என்பது பதினொன்று கால் மோட்டா ரகக் கதர்தான். சாதாரணமாக மஸ்லின் என்றெல்லாம் போடமாட்டார்கள். மோட்டா ரகக் கதர்தான் போடுவார்கள். காலிலே போட்டிருக்கிற செருப்பைப் பார்த்தால் பத்து ரூபாய்க்கு அடக்கமான ஹவாய் செருப்புகள்தான். கையிலே wrist watch என்று சொன்னால், அவர் அணிந்திருக்கிற wrist watch மிக மிகச் சாதாரணமான H.M.T. Wrist Watch. பையிலே வில்சன், சாதாரணமான பால்பாயிண்ட் பேனா இருக்கிறதே, அதைத்தான் வைத்திருப்பார். அவ்வளவு எளிமையாக கடைசி காலம் வரை வாழ்ந்திருக்கிறார். அவருடைய அரசியலில் தன்னைப்பற்றியோ, தன் குடும்பத்தைப்பற்றியோ ஒருபோதும் எண்ணியதில்லை. தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு உண்டு, தான் உண்டு, தன் சம்பாத்தியம் உண்டு என்று ஒருபோதும் அவர் இருந்தது கிடையாது. அவர் பிறருக்காகத்தான் வாழ்ந்தாரே தவிர, தன்னுடைய குடும்பம் என்று இருந்தது இல்லை. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினாலே அவர் எப்பொழுதும் தனக்கு எந்தச் சலுகையும் வேண்டுமென்று ஒருபோதும் எதிர்பார்த்த தில்லை. போராட வேண்டும், சிறைக்குச் செல்ல வேண்டும் என்று வந்த நேரத்தில் சிறை சென்றவர். காமராஜர் தலைமையிலே அகவிலைக் குறைப்புப் போராட்டம் நடந்தபோது அவர்கள் போராடி, மறியல் செய்து சிறைக்குச்

சென்றார்கள். அதற்குப் பிறகு அன்னை இந்திரா காந்தி அவர்கள் சிறைவாசம் அனுபவிக்கிற நிலை ஏற்பட்டபோது, மக்களவையிலேயிருந்து அவர் வெளியேற்றப்பட்ட நேரத்தில், அவர் அன்றையதினம் போராடி சிறையிலே இருந்தார். இரயில் நிலையத்திற்கு காமராஜர் பெயர் சூட்ட வேண்டும் என்பதற்காக 1990 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தியபோது அவர் போராடி சிறையிலே இருந்தார். எல்லாத் தொண்டர்களோடும் சமமாக இருந்தார்கள். அவருக்கு விரிப்புகூட எதுவும் தரவில்லை. எந்த விரிப்பும் இல்லாமல் சாதாரணமாக வைக்கோல் புல்லைப் போட்டு அதன் மேலேதான் — படுத்திருந்தார் என்றுகூடச் சொல்லமுடியாது — உட்கார்ந்துதான் இரவு முழுவதும் அங்கே இருந்தார்கள். அந்த அளவிற்கு அவர் தனக்கு தனிச் சலுகை வேண்டும் என்று ஒருபோதும் கருதியவர் அல்ல. அவரைப் பொறுத்தவரையில் அவர் எதைச் சொன்னாரோ அதைச் செய்வார். இங்கே ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதச்சார்பற்ற அரசியலிலே அவருக்கு முழுமையான, ஆழமான நம்பிக்கை உண்டு என்று சொன்னார்கள். அவர் எதை நினைக்கிறாரோ அதைத்தான் சொல்வார். அரசியலிலே மதம் கலக்கக்கூடாது என்பதிலே மிகத் தெளிவாக இருந்தார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் மதத்தினாலே நம்முடைய நாட்டுக்காரர்களைப் பிரிக்கக்கூடாது என்பதிலே அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. அதிலே கடைசி வரை அவர்கள் அப்படியேதான் வாழ்ந்தார்கள்.

அதேபோல, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காகவும் அவர் நிறைய போராடி இருக்கிறார். பலருக்குத் தெரிந்திருக்கலாம். பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆட்சியிலேயும் பங்கு, அதிகாரத்திலேயும் பங்கு என்று தாழ்த்தப்பட்ட தலித் சமுதாய மக்களுக்கு, அவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்பதிலே அவர் மிகத் தெளிவாக இருந்திருக்கிறார். சாதாரணமாக, பேசுபவர்கள் செயலிலே காட்ட மாட்டார்கள், ஆனால் தலைவரைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கட்டத்திலேயும் நீங்கள் பார்த்தீர்களேயானால், ராஜீவ் காந்தி இருந்தபோது, சுதந்திரம் வந்து 40 ஆண்டு காலம் ஆகியும்கூட இராஜஸ்தான் மாநிலத்திலே பல பெரிய கோவில்களில் அரிஜனங்கள் உள்ளே நுழைய முடியாது. அந்த ஆலயப் பிரவேசத்திற்கு மூப்பனார் அவர்களைத்தான் அனுப்பி வைத்தார்கள். மூப்பனார் அவர்கள் போய் அங்கே ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. சரி, ஆலயப் பிரவேசம் அவர்களுடைய ஊரிலேயா நடந்தது, எங்கேயோ நடந்தது என்று நினைத்தால் அதுவும் இல்லை.



தன்னுடைய ஊரிலே அவர் அதைச் செய்து காட்டினார். தன்னுடைய ஊரிலே பல பெரியோர்களைச் சந்தித்துப் பேசினார், மற்றவர்களை சந்தித்துப் பேசினார், குருமார்களை சந்தித்துப் பேசினார். அத்தனை பேரையும் சந்தித்துப் பேசி தன்னுடைய சொந்த ஊரிலே ஆலயப் பிரவேசத்தை தானே முன்னின்று நடத்திக் காட்டினார். ஒரு ஆலயப் பிரவேசம் என்பது மட்டுமல்ல, அங்கே நர்ன்கு அம்சத் திட்டமாக - ஆலயப் பிரவேசம், பொது மயானம், குடிதண்ணீர் ஒரே இடத்திலே அத்தனை பேருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு, சமபந்தி போஜனம் என்று சொல்லி நான்கு அம்சத் திட்டத்தை அன்றையதினம் அவர்கள் அங்கே நிறைவேற்றிக் காட்டினார்கள்.

முற்பகல் 10-45

அதுமட்டுமல்ல, 1997 ஆம் ஆண்டு மத்தியிலே ஜனாதிபதி தேர்தல் வரவேண்டிய கட்டத்திலே மூப்பனார் அவர்கள்தான் முதன்முதலாக இது சுதந்திரப் பொன்விழா ஆண்டு, மகாத்மா காந்தியடிகள் அவர்களுடைய கனவை நனவாக்க வேண்டும் என்று சொல்லி, இந்த ஆண்டிலேயாவது தேர்ந்தெடுக்கப்படுபவர் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க வேண்டுமென்று முதன் முதலிலே இந்தியாவிலே குரல் கொடுத்தவர் தலைவர் மூப்பனார் அவர்கள். அந்த அளவிற்கு அவர் சொல்லிலேயும், செயலிலேயும் எப்பொழுதும் முழுமையான நம்பிக்கை உண்டு. நினைக்காததை, விரும்பாததை எப்பொழுதும் எந்தக் காலகட்டத்திலும் சொன்னதில்லை. அவர் எப்பொழுதும் பதவியைத் தேடிச் சென்றதில்லை. ஒருபோதும் எந்தப் பதவியையும் அவர் நாடிச் சென்றதும் இல்லை, தேடிச் சென்றதும் இல்லை. பதவிகள் அவரைத் தேடி வந்திருக்கலாம். அமைச்சராகக்கூட இருந்ததில்லை என்று பலர் நினைக்கிறார்கள். உண்மைதான், அவர் அமைச்சராக இருந்ததில்லை. இங்கேயும் அமைச்சராக இருந்ததில்லை. மத்தியிலே அவர் அமைச்சராக வேண்டுமென்று விரும்பியிருந்தால் பல முறை இந்திரா காந்தி அவர்கள் இருந்த நேரத்தில், அவருக்கு அமைச்சரவையிலே சேருங்கள் என்று அழைப்பு விடுக்கப்பட்டது. யார் சொன்னால் கேட்பார்களோ அவரை விட்டே தலைவரிடத்திலே பேச வைத்தார்கள். கண்டிப்பாக இந்த முறை சேரச் சொல்லுங்கள், அவர் எந்த இலாகா வேண்டுமென்று விரும்புகிறாரோ அந்த இலாகாவை நான் தரத் தயாராக இருக்கிறேன் என்றெல்லாம் சொல்லி, பேச வைத்தார்கள். இந்திரா காந்தி காலத்திலே

அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி காலத்திலே அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வளவுகூட வேண்டாம், 1996 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்த பிறகு மத்தியிலே ஒரு குழப்பமான நிலை வரும் என்று எல்லோரும் நினைத்த நேரத்தில், ஒரு ஐக்கிய முன்னணி அமைத்தால் காங்கிரசின் ஆதரவோடு ஆட்சி அமைக்க முடியும் என்ற நம்பிக்கை வந்தபோது, தமிழ்நாடு இல்லத்திலே அன்றையதினம் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே அத்தனை தலைவர்களும், முதலிலே வந்த இரண்டு பெயர்களுக்கு அடுத்த பெயராக —அவர்கள் இரண்டு பேரும் ஏற்க முடியாத அளவிலே இருந்தார்கள்— அதற்கடுத்த பெயராக, கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அத்தனை பேரும் சொன்ன பெயர் தலைவர் அவர்களுடைய பெயர். இவர் ஒருவர்தான் பிரதமராக வர வேண்டுமென்று அங்கே சொன்னார்கள். அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கெல்லாம் காரணம் —அதையெல்லாம் இப்போது பேசிக்கொண்டிருப்பது அவ்வளவு சரியாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை. அவர் ஏற்காமல் அதைத் தவிர்த்துவிட்டார். அவர் எந்தப் பதவியையும் தேடிச் செல்லாதவர். பிரதமர் பதவியே வேண்டாம் என்று சொன்னவர்.

நண்பர்கள குழாம் என்று இங்கே சொன்னார்கள். அவர்களுக்கு நண்பர்கள் என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிலும் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அவருக்கு நண்பர்கள். அவருக்கு நண்பர்கள் இல்லாத கட்சியே கிடையாது. தமிழ்நாட்டிலேதான் இப்படி என்று சொன்னால், அகில இந்திய அளவிலே எடுத்துக்கொண்டால்கூட, காங்கிரஸ் இயக்கத்திலே இருப்பவர்கள் நண்பர்களாக இருப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல. தென்குமரியிலிருந்து காஷ்மீரம் வரையிலே நீங்கள் பார்ப்பீர்களானால், எல்லோரும் அவருக்கு நண்பர்கள். கேரளாவிலே எடுத்துக்கொண்டால், எலியும் பூனையுமாக இருக்கிற இரண்டு பேரும் அவர்களிடத்திலே மிக, மிக நெருக்கமாக, இணக்கமாக, நண்பர்களாக வாழ்ந்தார்கள். அதேபோல, இந்தியா முழுவதும் காங்கிரஸைப் பொறுத்தவரையில் எல்லா முதலமைச்சர்களுக்கும் அவர் மிகவும் வேண்டியவர். காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள்— அவர்களுடைய இல்லத்திலே, நீங்கள் பார்ப்பீர்களானால் ஹர்கிஷன் சிங் சுர்ஜித் வந்து அவர்களிடத்திலே தனிமையாக யாருமே இல்லாத நேரத்திலே உரையாடிவிட்டுச் செல்வதைப் பார்க்க முடியும். சீத்தாராம் யெச்சூரி அவர்களும், ஹர்கிஷன் சிங் சுர்ஜித் அவர்களும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அந்த இரண்டு பேரும்



அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள், இணக்கமானவர்கள். அதேபோல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பர்தன், ராஜா, இந்திரஜித் குப்தா—இந்திரஜித் குப்தா அவருடைய வீட்டிற்கு நேர் மேல் வீட்டிலே வாழ்ந்தவர்கள்—அவர்களெல்லாம் மிக, மிக நெருக்கமான, இணக்கமான நண்பர்கள். அதேபோல, இ. அகமது, இப்படி பலரையும் சொல்லலாம். பல பேரைச் சொல்லலாம். அவ்வளவு நெருக்கமான நண்பர்கள். மாநிலங்களவை உறுப்பினராக இருந்த நேரத்திலும் சரி, இல்லாத நேரத்திலும் சரி, மதியம், பாராளுமன்ற மைய மண்டபத்திலே அவர் நுழைந்தால் அந்தப் பகுதியே கலகலப்பாக இருக்கும். தனியாகத் தெரியும், தமிழ்நாட்டுக்காரர்கள் எல்லோரும் அங்கே நிற்பார்கள். அதுபோக, அவர்களுக்கு நண்பர்களாக இந்தியா முழுவதும் இருக்கிற நண்பர்கள் அத்தனை பேரும், அவரைச் சுற்றி நிற்பார்கள். அவ்வளவு பேரையும் வைத்துக்கொண்டு அவர் சிரித்து ரசித்து உணவு அருந்துகிற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் மைய மண்டபத்தில். இந்த முறை, கடைசியாக போனபோது அவராலே மைய மண்டபத்திற்குச் செல்ல முடியவில்லை. அவரோடு சென்ற நண்பர், மைய மண்டபத்தை மட்டும் பார்க்க முடிந்ததே தவிர, உள்ளே செல்ல முடியவில்லை என்று என்னிடத்திலே சொன்னார்கள். அந்த அளவிற்கு அவர்களுடைய உடல்நிலை அன்றையதினம் பாதிக்கப்பட்டுவிட்டது. அவர்களிடத்திலே இன்னொன்று என்னவென்று கேட்டீர்களானால் —வெளிநாட்டுக்குப் போகிறோமோ, இல்லையோ, எல்லோரும் ஆளுக்கு ஒரு Passport வைத்திருப்போம்—அவர்களிடம் Passport-கூட கிடையாது. ஒரே ஒரு முறை, ஒரே ஒரு நாள் வெளிநாடு சென்றிருக்கிறார், இலங்கைக்கு. அதுவும் எதற்காக? தமிழர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, ஒரே ஒரு நாள் இலங்கைக்கு ராஜீவ் காந்தி அவர்களோடு சென்றுவிட்டு வந்தார்கள். ராஜீவ் காந்தி அவர்கள் அன்றையதினம் ஜெயவர்தனே அவர்களோடு உடன்பாடு கண்டார்கள் அல்லவா, அந்த உடன்பாடு காண்பதற்காகச் சென்றபோது, Passport இல்லையென்று சொன்னதற்கு, ஒரே ஒரு நாள், அதற்காகத் தனியாக ஒரு permit வாங்கலாம், அந்தப் permit-ஐ வாங்கிக்கொண்டு, மாற்றுவதற்குத் துணிகூட இல்லாமல், ஒரே ஒரு முறை வெளிநாடு சென்றுவிட்டு வந்திருக்கிறார். அவ்வளவு எளிமையாக தன் வாழ்க்கை முழுவதும் வாழ்ந்த அந்தத் தலைவரை நாங்கள் இழந்திருக்கிறோம். எங்களுக்கு ஆறுதல் கூறிய அத்தனை பேருக்கும், எங்களுக்கும், எங்கள் கட்சிக்காரர்களுக்கும், இயக்கத் தொண்டர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்த, தெரிவிக்க இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு

முதலமைச்சர், பேரவைத் தலைவர், அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரை இழந்து தவிக்கின்ற அவருடைய மனைவி, மகன், மகள், அவர்களுடைய இளவல்கள், சகோதரிகள், அவர்களுடைய உற்றார் உறவினர்கள் அத்தனை பேருக்கும் எங்களுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென பிரார்த்தித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.*

*முற்பகல் 10-50*

***பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களால் ஒரு பெருந்தலைவர் என்று மதிக்கப்பட்டு தமிழ் மாநில காங்கிரஸினுடைய தலைவராக விளங்கி, மாநிலங்களவை உறுப்பினராகவும் திகழ்ந்து, இந்த சட்டமன்றத்திலேயும் இடம்பெற்று எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய என்னுடைய பெருமதிப்பிற்குரிய திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் நேற்று இரவு மறைய நேரிட்ட துயரத்தோடு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள இங்கே நிற்கிறேன்.*

*மூப்பனார் அவர்களை ஏறத்தாழ 1957-வது ஆண்டிலேயிருந்து அறிகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அவர், பெருந்தலைவர் காமராஜரைப் பின்பற்றுகிற ஓர் இளைஞராக அந்த இயக்கத்திலே ஈடுபட்ட காலத்திலேயும், என்னிடத்திலேயும், அதேபோல இன்றைய கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்திலேயும் நட்போடு பழகுகிற ஒரு நல்ல தொடர்புடையவராக விளங்கினார்கள்.*

*அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலே அவர் செல்வாக்கு மிக்கவராக, அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளராக, ஏறத்தாழ காமராஜருடைய பிரதிநிதியாக அங்கே விளங்கிய அந்தக் காலத்திலேயும், அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களிடத்திலேயும் நட்பாடுகிற, உறவாடுகிற, நல்ல எண்ணத்தைப் பரிமாறிக்கொள்கிற ஒரு தலைவராக விளங்கி, ஏறத்தாழ அகில இந்திய அரசியலில் ஒரு நடுநிலையாளர் என்ற வகையில் சிறந்த பெயர் பெற்றுத் திகழ்ந்தார்கள்.*

*1967-லேயிருந்து 1971 வரையில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிற வாய்ப்புப் பெற்ற அந்தக் காலத்தில், பல நேரங்களில் மத்திய மண்டபத்தில் பெருந்தலைவர் காமராஜரோடு மூப்பனார் அவர்களும்*



*அங்கு வந்து, எங்களைப் போன்றவர்களையும் அழைத்து உரையாடுகிற அந்தச் சூழ்நிலையில், அரசியல் பிரச்சினைகளையும் உரையாடியே தெளிவுபடுத்தி அதைப் பற்றிய பல முடிவுகளை அவர் எடுப்பதற்கு, அந்த உரையாடலையே பயன்படுத்தவல்லவராக தலைவர் காமராஜரோடு அவர்களும் விளங்கினார்கள்.*

*அகில இந்திய அரசியலில் அவர்களுடைய செல்வாக்கு மிகப் பெரியதாக வளர்ந்து, ஏறத்தாழ பல்வேறு மாநிலங்களிலே உள்ள அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய, ஒரு நடுநிலையாளராக மதிக்கப்படும் ஒரு நிலை அவருக்கு வாய்த்தது. இன்னும் சொல்லப்போனால், பெருந்தலைவர் காமராஜருக்கு எப்படி ஒரு செல்வாக்கு வளர்ந்ததோ, அதுபோன்ற ஒரு செல்வாக்கு அவருக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. இருந்தாலும், அண்மைக் காலத்தில் 6, 7 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய அரசின் பிரதமரோடு ஒரு மாறுபட்ட கருத்து ஏற்பட்டபோது, தமிழ் மாநில காங்கிரஸைத் தோற்றுவித்து, எந்தக் குறிக்கோளுக்காகத் தோற்றுவித்தாரோ அந்த நோக்கத்தில் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உடன்பாடு கொண்டு, பொதுத் தேர்தலைச் சந்தித்தார்கள்.*

*அவருடைய கட்சி, அவருடைய இயக்கம், தேசிய நீரோட்டத்திலே அந்த இயக்கத்தைக் கொண்டு செல்கிற அவருடைய ஆர்வத்திற்கேற்ப கடந்த காலத் தேர்தலிலே வேறு ஒரு முடிவு எடுத்தபோதும், அவரைப் பொறுத்தவரையில் அவருடைய இயக்கத்தை வெற்றி பெறச் செய்தன. அவர் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல நம்பிக்கையை உருவாக்கக்கூடியவராக விளங்கிய காலகட்டத்தில், அவர் மறைவுற்றது உள்ளபடியே பெரும் வேதனையைத் தரக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. மூன்று திங்களுக்கு முன்னர் அவர் சற்று உடல் நலிவுற்றிருந்த அந்தக் காலத்திலே அவ்வப்போது சிகிச்சை பெற்று வந்தபோதும், அவரைப் பார்க்கிறபோது, உரையாடுவதற்கு அதிகமாக முடியாவிட்டாலும்கூட, இரண்டொரு வார்த்தைகளைப் பேசக்கூடிய அந்த வாய்ப்பை நான் பெற்றிருந்தேன்.*

*கலைஞர் அவர்கள் இரண்டு, மூன்று முறை அவர்களைச் சென்று பார்த்தார். இப்போது கடந்த ஒரு வாரத்திற்குள்ளாக அவரது உடல்நிலை மிக அதிக அளவிற்குப் பாதிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் மிகச் சிறந்த மருத்துவர்கள் அவரை எப்படியும் காப்பாற்றிவிடமுடியும் என்ற நம்பிக்கையைத்தான் தெரிவித்தார்கள். இருந்தாலும், அவர் மறைய*

223443
600 008

நேரிட்டுவிட்டது. காப்பாற்ற முடியாத ஒரு கட்டத்தில் அவர் மறைவு நேரிட்டுவிட்டது.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

என்று புறநானூற்றுத் தொடர் குறிப்பிடுவதைப் போல, தன்னுடைய அரசியல் வாழ்வை ஒரு புகழ் வாழ்வாக நிறைவு செய்தவர் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள்.

*முற்பகல் 10-55*

அவருடைய மறைவு நமக்குத் தருகிற துயரத்தோடு என்னுடைய அஞ்சலியை நான் செலுத்துவதோடு, அவருடைய குடும்பத்திற்கு, அவருடைய மகனுக்கு, அவருடைய துணைவியாருக்கு, அவருடைய இயக்கத்தைச் சார்ந்த, தமிழ் மாநில காங்கிரஸைச் சார்ந்த தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைசிறந்த பண்பாளராய் மக்கள் இதயமெல்லாம் நிறைந்த, நம் அனைவருடைய அன்புக்கும் உரிய திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் மறைந்தார் என்ற தகவல் என்னை மிகப்பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் அனைவராலும் பெரிதும் போற்றப்பட்ட, மதிக்கப்பட்ட மூத்த தலைவர். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு மருத்துவமனையில் திரு. ஜி.கே. மூப்பனார் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அவரைச் சந்தித்தேன். நன்றாகப் பேசினார். "உள்ளாட்சித் தேர்தலில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படுவோம்" என்று தெரிவித்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்தது நம்மையெல்லாம் பெரும் கவலைகொள்ளச் செய்தது.

தேசபக்தி மிக்க அற்புதத் தலைவராய் அவர் ஆற்றிய பெரும் பணிகள் நம் நெஞ்சில் நிழலாடுகின்றன. எந்தச் சூழ்நிலையிலும் நிலை குலையாத, நிதானம் மிக்க, தமிழ்நாட்டின் ஒரு சில தலைவர்களில் திரு. மூப்பனார் அவர்களும் ஒருவர். அவர் எப்போதுமே கோபமடைந்து நான் பார்த்ததே இல்லை. என்ன நிகழ்ந்தாலும், யார் என்ன பேசினாலும், அவரையே



குறை கூறிப் பேசினாலும் அவர் கோபம் அடையமாட்டார். எப்போதும் நிதானத்தைக் கடைப்பிடிப்பார். அவர் மனிதநேயப் பண்பாளர். 1989 மார்ச் 25 ஆம் தேதி சட்டப் பேரவையில் நான் தாக்கப்பட்ட பின்பு மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட்ட போது, மருத்துவமனைக்கு வந்து என்னைச் சந்தித்தார். அப்போது அவர் எனக்கு ஆறுதல் கூறிய பாங்கு என் வாழ்நாளில் என்றுமே நான் மறக்க முடியாதது. அவர் எல்லோரிடத்திலும் அதே பண்புடன்தான் பழகுவார். இங்கே மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் தெரிவித்ததைப்போல, நான் எப்போது அவர் இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தாலும், நான் விடைபெறும்போது வாசல்வரை வந்து என்னை வழியனுப்பி வைப்பார். உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தேன். அன்று மிகவும் பலகீனமாகக் காணப்பட்டார். அப்போதும், அந்தச் சூழ்நிலையில் நான் விடைபெற்றுப் போய் வருகிறேன் என்று சொன்னபோது, எழுந்து வந்து, வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார். நான், "வேண்டாம், நீங்கள் வரவேண்டாம், அமருங்கள்" என்று எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. அப்பேர்ப்பட்ட பண்பாளரை நாடு இழந்துவிட்டது. அவரது மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். பொது வாழ்க்கையில் ஒரு முன்னுதாரணமாக விளங்கிய திரு. மூப்பனார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்ினருக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் தொண்டர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூத்த தலைவர் மூப்பனார் அவர்கள் மக்கள் நலன் மட்டுமே மனதில் கொண்டு உழைத்தவர். அதனால் மக்கள் தலைவர் என்று அனைவராலும் மதிக்கப்பட்டு, மக்கள் நெஞ்சங்களில் நிறைந்துவிட்டவர். உயர்ந்த ஜனநாயகப் பண்புகளில் ஊறித்திளைத்த உத்தமத் தலைவர். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு அனைவரிடமும் இனிமையாகப் பழகும் இயல்புடையவர். நட்பைப் பெரிதாக மதிக்கக்கூடியவர் என்றாலும், எந்தச் சூழ்நிலையிலும் கொள்கையை விட்டுக்கொடுக்காத கோமானாகத் திகழ்ந்தவர். குழப்பமான நேரங்களில் நாட்டு நலனில் அக்கறைகொண்டு, தெளிவாகவும், தீர்க்கமாகவும் முடிவுகளை எடுக்கக்கூடிய அரசியல் முதிர்ச்சியும், அனுபவ ஞானமும், ஆழ்ந்த அறிவும், பக்குவமும் மிக்க பண்பாளர். தமிழ்மொழி தழைத்தோங்க வேண்டுமென்ற எண்ணம்கொண்ட மொழிப்பற்று மிக்க தலைவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஏனைய கட்சித் தலைவர்கள்

[பேரவைத் தலைவர்] [2001 ஆகஸ்ட் 30

தெரிவித்துள்ள இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கலையும் இணைத்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன் மூலம் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்த பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (31-8-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*35. 1999-2000 ஆம் ஆண்டிற்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*36. 1999-2000 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*37. 1999-2000 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*38. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்*



2001 ஆகஸ்ட் 30]

*(தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*39. 1999-2000 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*35. மானியக் கோரிக்கை எண் 15 - தமிழ்நாடு காவல் துறையின் 2001-2002 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு. (ஆங்கிலம்)*

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

223443